# நற்றிணையில் வாழ்வியல் நெறிமுறைகள்

**முனைவர் இரா.மலர்விழி**
உதவிப் பேராசிரியர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

வரையறைகளை வகுத்துக் கொண்டு இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மனிதர்கள். அந்த வரையறையை, இலக்கணத்தை, நெறிமுறையை வாழ்வியல் நெறிமுறைகள் என்று கூறுகிறோம். செவ்வியல் இலக்கியமான சங்க இலக்கியங்களில் ஒன்றான நற்றிணை காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் இன்றைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் போற்றத்தக்கதாவும் இருக்கின்றன. மாந்தர்கள் கடைபிடித்து வாழும் நெறிமுறைகளான இல்லற மாண்புகள், இல்லறக் கடமைகள் நற்றிணையில் இடம்பெற்றுள்ளதைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

## இல்லற மாண்புகள்

இல்லறம் என்பது அன்பும் அறனும் பூண்டு வாழ்வதாகும். அத்தகைய வாழ்வில் பெறும் பேறுகளுள் தலையாது மக்கட்பேறு. மக்களைப் பெற்ற மகளிர்க்குப் பேய் முதலியவற்றால் தீங்கு நேராவண்ணம் ஐயவி என்னும் வெண்சிறு கடுகினால் அமைந்த எண்ணெய்யைப் பூசும் வழக்கம் இருந்ததை நற்றிணையின்,

**"வெறியுற விரிந்த அறிவை மெல்லெனப்**
**புனிறுநாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச**
**ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈர்அணிப்**
**பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்**
**சீர்கெழு மடந்தை ஈரிமையொருந்த"** **(நற். 40)**
**"நெய்யோடு இமைக்கும் ஐயவித் திரள்கழ்**
**விளங்குநர் விளங்கக் கிடந்தோட் குறுகி**
**புதல்வன் ஈன்றெனப் பேர் பெயர்த்து"** **(நற். 370)**

போன்ற பாடல்கள் சுட்டுகின்றன. இக்காலத்தும் கிராமப்புறங்களில் அம்மை வந்த வீடுகள், குழந்தைபெற்ற வீடுகள் போன்றவற்றின் முன்புறத்தில் வேப்பந்தளிரை செருகி வைக்கும் வழக்கம் இருப்பதைக் காணமுடிகிறது.

இன்றைய சமுதாயத்தில் கணவன் மனைவி உறவில் பிரிவு என்பது இயல்பான ஒன்றாக இருக்கிறது. அதற்குக் காரணம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமையே ஆகும். அங்ஙனம் கணவன் மனைவி பிரியாமல் ஒற்றுமையுடன் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழ்வதற்குரிய வழிகாட்டுதல்களை,

**"நின்ற சொல்லர் நீடுதோன்றினியர்**
**என்றும் என்றோன் பிரிபறியலரே**
**..............................................................**
**சிறுமை உறுபவோ செய்பறியலரே"** **(நற். 1)**

என்ற சங்கப் பாடலில் காணலாம். இதில் தலைவன் தவறாத வாய்மையுடையவன், நெடிதாகத் தோன்றுகின்ற இனிமையுடையவன் எப்பொழுதும் என் தோள்களைப் பிரியும் குணக்குறைபாடு இல்லாதவன் என்பது போன்ற குடும்ப ஒற்றுமைக்குரிய கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து பொருளுக்காக சென்றத் தலைவன் தன்னை விட்டு நீண்டநாள் பிரிந்து இருக்கின்ற சிறுமையான செயலை செய்யமாட்டான் என்று தலைவி தலைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கையையும் மன உறுதியையும் அறியமுடிகிறது.

செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் பிறந்த தலைவி திருமணம் புரிந்து வாழ்க்கை நடத்துகிறாள். தன் தலைவன் குடும்பம் ஏழ்மையாக இருந்தாலும் செல்வமிக்கத் தன் தந்தையிடம் சென்று பொருள் பெற்று வாழலாம் என்று எண்ணவில்லை. ஒரு பொழுது மட்டுமே உண்டு கணவனுடன் இன்பமாக வாழும் தன் மகளின் பொறுப்பையும், இல்லற மாண்பையும் கண்ட பெற்றோர் வியக்கின்றனர். இப்படிப்பட்ட தலைவியின் இல்லறச்சிறப்பை,

**“கொண்ட கொழுநன்குடி வறன்உற்றென**
**கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்**
**ஒழுகுநீர் நுண்கு அறல் போல**
**பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையாளே”** **(நற். 110)**

என்ற பாடல் உணர்த்துகிறது. இன்றைய சமூகத்தில் செல்வச் செழிப்புமிக்கக் குடும்பத்தில் உள்ள ஒருவரைத் திருமணம் செய்து கொண்ட கணவன் மனைவியிரிடையே பிரிவு ஏற்படுகிறது. இந்தப் பிரிவுக்கு செல்வம் மிக்கதும், உடலாலும் உள்ளத்தாலும், புரிந்து செயல்படாததும், வளைந்து கொடுக்காத போக்கும், ஆணவமும் தான் காரணமமாக அமைகிறது. ஆனால் ஒருவரை ஓரவர் புரிந்துகொண்டு சேர்ந்து வாழும் சூழலை நற்றிணை 110-ஆம் பாடல் விளக்கியிருப்பதை அறிகிறோம்.

தலைவன் தலைவி பிரிவுக்குப் பரத்தையர் தொடர்பு ஒரு காரணமாக அமைகிறது. பரத்தையின் காரணமாகப் பிரிந்த தலைவன் மீண்டும் தலைவியை நாடி வந்து தலைவியின் ஊடல் தணிக்குமாறு தோழியிடம் வேண்டினான். அப்பொழுது தோழி,

**“......................... நின் மாண்இழை மகளிரை**
**எம்மமனைத் தந்துநீ தழீஇயினும் அவர்தம்**
**புன்மனத்து உண்மையோ அரிதே அவரும்**
**பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்த**
**நன்றி சான்ற கற்போடு**
**எம்பாடு ஆதல் அதனினும் அரிதே”** **(நற். 330)**

என்று கூறுகின்றாள். இதில் அணிகள் புனைந்த பரத்தை மகளிரை எம்மனையில் கொணர்ந்து குளமகளிரைப் போலத் தழுவிக்கிடந்தாலும் அவர்களுடைய மனதில் உண்மையை அறிதல் அரிது. அப்பரத்தையரையும் மக்கட் செல்வத்தைப்பெற்று பசிய பொன்னாலான தொடிகளை அணிந்து சிறப்புடன் விளக்கும் குலமகளிரையும் ஒப்பா எண்ணுதல் அதனினும் அரிது என்று கூறி பரத்தையர் குலமகளிர்க்கு ஒப்பானவள் அல்ல என்பதை உணர்த்தி அவனைத் திருத்துகிறாள். தவறுகள் செய்வது மனித இயல்பு. அத்தவற்றை உணர்ந்து மீண்டும் தலைவியிடம் வரும்போது அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் தரவேண்டும். கணவன் மனைவி உறவும் வாழ்க்கையும் நெடிது காலம் நீடிப்பதற்கு இத்தகைய போக்கு அவசியமாகின்றது.

உடன்போக்கின்போது தலைவனுடன் தலைவியை அனுப்பிய தோழி,

**“அண்ணாந்து ஏந்திய வனமுலை தளிரினும்**
**பொன்நேர்மணி மணியின் தாழ்ந்த**
**நல்நெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்**
**நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் உளர”** **(நற். 10)**

என்று தலைவனிடம் கூறுகின்றாள். அண்ணாந்து உயர்ந்த அழகிய கொங்கைகள் தளர்ந்தாலும். பொன்போன்ற மேனியில் கருமணி போலத் தாழ்ந்திருக்கும் நல்ல நெடிய கூந்தலானது நரையோடு முடிக்கப்பெறும் தன்மையை அடைந்தாலும், இவள் முதிர்ந்தாள் என்று கருதி கைவிடாமல் பாதுகாப்பாயாக என்கிறாள். இதில் வயது முதிர்ந்த பிறகும் தலைவியைத் தலைவன் அன்போடு பாதுகாக்க வேண்டும் என்ற கருத்து வெளிப்படுகிறது.

**இல்லறக் கடமைகள்**

இல்லறத்தில் உள்ள அனைவருக்கும் பல்வேறு கடமைகள் உண்டு. இல்லறக் கடமைகளான பொருளீட்டல், விருந்தோம்பல், இரந்தோர்க்கு ஈதல், நிலையாமை, வினைபயன், அறம் செய்தல், கடவுள் வழிபாடு போன்றவை நற்றிணையில் இடம்பெற்றுள்ளன.

**பொருளீட்டல்**

இம்மைக்குரிய புகழும், மறுமைக்குரிய இன்பமும், மறுமையிலும் இன்புறுச்செய்யும் கொடைமையும் ஆகிய மூன்றையும் ஒருங்கே பெறுவதற்குப் பொருள் தேவை. இதனை உணர்ந்த தலைவன் பொருளீட்டப் பிரிந்து செல்கின்றான். பிரிவாற்றாத தலைவி,

**"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்**
**அசையுநர் இருந்தோர்க்கு அரும்புணர்வு இன்பமென**
**வினைவயின் பிரிந்த வேறுபடு கொள்கை"**

என்று கூறுகின்றாள்.

**விருந்தோம்பல்**

பண்பாட்டினைப் போற்றி வாழ்ந்த சங்ககால மக்கள் விருந்தோம்பலைத் தலையாயப் பண்பாகக் கொண்டனர். இல்லறத் தலைவியின் கடமையாகத் தொல்காப்பியர்,

**"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்,**
**பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்"**

என்பர். இல்லறத்தில் கணவனும் மனைவியும் இணைந்து விருந்தோம்ப வேண்டும். தம் உற்றார் உறவினரை மட்டுமல்லாமல் தம் இல்லம் நாடிவரும் பிறரையும் உண்டியாலும் உறையுளாலும் உபசரிக்கவேண்டும். கணவன் மனைவியரிடையே ஏற்படும் ஊடலைத் தீர்க்கும் வாயில்களாக விருந்தினர் அமைவர். விருந்தினர்வரின் இருவரும் ஊடலை மறந்து விருந்தினரைப் பேணும் கடமையில் ஈடுபடுவர். தலைவி ஊடல் கொண்டிருக்கும்போது விருந்தினர் வந்தால் அவர்களை இன்முகம் காட்டி இனிதே உபசரிப்பாள் என்பதை அறிந்த தலைவன் ஊடலைத் தீர்க்க யாரேனும் விருந்தினர் வரமாட்டார்களா என்று ஏங்குவதை,

**"........................................ அரிவை**
**எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாளன்று**
**சிறு முள்எயிறு தோன்ற**
**முறுவல் கொண்ட முகங்காண் கம்மே" (நற். 120)**

என்ற பாடலில் காணலாம். இதிலிருந்து அக்காலத்தில் விருந்தோம்பல் எத்தகைய முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என்பதை அறியலாம். அதுமட்டுமன்றி அக்கால மகளிர் நள்ளிரவு ஆயினும் விருந்தினர் வரின் அவர்களை உபசரிக்கும் பண்புடையவர்கள் என்பதை,

**"அல்லிலாயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பினர்" (நற். 142)**

என்ற பாடல் வரிகள் சுட்டுகின்றன.

**இரந்தோர்க்கு ஈதல்**

தம்மிடம் வந்து இரந்து நிற்பவர்க்கு அவர் வேண்டும் பொருளைத் தந்து அவருடைய விருப்பத்தினை நிறைவேற்றுதல் இல்லத்தாரின் கடமையாகும். இதை அறியாது தலைவன் விரைவில் வினைமுடித்து மீண்டு வரவில்லை. இதனை,

**"................................. தம்வயின்**
**இரந்தோ மாற்றல் ஆற்றா**
**இல்லின் வாழ்க்கை வல்லாதோரே" (நற். 84)**

என்று பிரிவிடை ஆற்றாத தலைவி தோழியிடம் வருந்திக் கூறுகின்றாள். இதிலிருந்து பிரிந்த தலைவன் விரைவில் மீண்டு வந்தால் அவனுடன் சேர்ந்து இல்லறக் கடமையாகிய அறம் செய்ய முடியும். அதனை அறியாத தலைவன் விரைவில் மீண்டும் வரவில்லையே என்று வருந்துவது தெரிகிறது.

**நிலையாமை**

யாக்கை, இளமை, செல்வம் மூன்றும் நிலையில்லாதவை. அழியக்கூடிய இவற்றை நிலையானது என்று மனிதன் நினைக்கின்றான். அதனால் நிலையாமையைப் பல இலக்கியங்கள் விளக்கிக் கூறுகின்றன. நற்றிணையும்,

**"இன்பமும் இளமையும்**
**எய்கணை நிழலிற் கழியும்"** **(நற். 46)**

என்றும்,

**"இளமை கழிந்த பின்றை வளமை**
**காமம் தருதலும்ம இன்றே"** **(நற். 126)**

என்றும் இளமை நிலையாமையையும்,

**"மன்னாப் பொருட்பிணி"** **(நற். 46)**
**"நில்லாப் பொருட்பிணி"** **(நற். 126)**

என்று செல்வ நிலையாமையையும் கூறுகின்றது.

**வினைப்பயன்**

வினைகள் நல்வினை தீவினை என்று இரண்டு வகைப்படும். இப்பிறவியல் செய்த வினைக்கேற்பவே மறுபிறவியில் பலன் உண்டாகும். அரசனிடம் இருந்து பட்டங்கள் பெறல், குதிரை, தேர், யானை முதலியவற்றில் ஏறிச்செல்லுதல் முதலிய சிறப்புகள் முன்பு செய்த வினைகளினால் கிட்டுவனவாகும். இதனை,

**"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்**
**செல்வம் அன்று தன்செய்வினைப் பயனே"** **(நற். 210)**

என்ற பாடல்வரிகள் உணர்த்துகின்றன.

**அறம் செய்தல்**

இல்லற வாழ்க்கையின் கடமைகளும் ஒன்று அறம் புரிதல். அந்த அறம் புரிவதற்குரிய சிறப்பான மாதம் கார்த்திகை மாதம். அதிலும் குறிப்பாக கார்த்திகை நாளில் அறம்புரிவதே மிகச்சிறப்பானது என்பதைத் தலைவன்,

**"அறுமீன் கெழீஇய அறம்செய் திங்கட்**
**செல்சுடர் நெடுங்கொடி போலப்"** **(நற். 202)**

என்று தலைவியிடம் கூறுவதிலிருந்து அறியலாம்.

**கடவுள் வழிபாடு**

பழங்காலத்தில் மக்கள் இயற்கையை வழிபடுவார்கள். பலரும் வழிபடுமாறு தோன்றும் சூரியனைப் பற்றிய செய்தியை,

**"முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி**
**ஏமுற விளங்கிய சுடரினும்"** **(நற். 28)**

என்ற பாடல் வரிகள் சுட்டுகின்றன. மேலும் கடவுளுக்குப் பலிச்சோறு படைத்தலை,

**"நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து**
**உகுபலி அருந்திய தொகுவிரல் காக்கை"** **(நற். 343)**
**"கருங்கண் கருணைச் செந்நெல் வெண்சோறு**
**குருடைப் பலியோடு கவரிய குறுங்கால்"** **(நற். 367)**

என்ற பாடல்களின் மூலம் அறியலாம்.

நற்றிணையில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் நெறிகள் அனைத்தும் இன்றைய வாழ்வியலை மேம்படுத்திக் கொள்வதற்கான கருத்துக்கள் ஆகும். இவை நம்முடைய இன்றைய வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ள துணைசெய்கின்றது.